தலைஞாயிறு பேருந்து நிலையம்.

743—(*வினா எண். 6311) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு நகரப் பேருந்து நிலையத்திற்கென புதுக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி மன்றம் வறுமையில் வாடுகின்ற காரணத்தாலே, அங்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் நிரந்தரமாக பஸ் ஸ்டான்ட் ஒன்று கட்ட முடியவில்லை. அரசு மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து அந்தப் பேரூராட்சிக்கு பஸ் நிலையம் கட்ட ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சி நிதிநிலை சரியில்லையென்பது அரசுக்குத் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வேலூர் நகரப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. பேருந்து கட்டிடத்திற்குள்ளே உள்ள கழிவறைகள், பிளாட்பார்ம்—தார் சாலைகள் சிதைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, கட்டிய ஒப்பந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

சென்னை நகரில் தனியார் தெருக்கள்.

744—(*வினா எண். 9112) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—